1994 மே 5]

பிற்பகல் 2.25

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)——தொடர்ச்சி.

(ஓ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட முன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1994), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்,''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த இரண்டு சட்ட முன்வடிவுகளும் திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் சேலம் மாநகராட்சி ஆகியவற்றைப் பற்றியதாகும். எனவே பேசுகின்ற உறுப்பினர்கள் இந்த மூன்று மாநகராட்சி சட்டங்களைப் பற்றியும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சட்டங்களையும் எங்களுடைய கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த மாநகராட்சிகளின் நிதிநிலைமை சரியாக இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை. ஒரு நகராட்சியை மாநகராட்சி ஆக்கும் போது அதனுடைய infrastructure சரியாக இருக்கிறதா என்று சொன்னால், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இல்லை என்றுதான் சொல்லமுடியும். அந்த அளவுக்கு இப்போதே மூன்று மடங்கு வீட்டு வரியை நகராட்சியில் ஏற்றிவிட்டிருக்கிறார்கள். மாநகராட்சி ஆக்கும் போது இனியும் அதிகமாக டாக்ஸ் போடும்போது நிச்சயமாக மக்கள்தான் அதனால் அவஸ்தைப்படுவார்கள். அதிகமான அதிகாரிகளைப் போடப் போகிறீர்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை பாதாளச் சாக்கடை இல்லை என்ற குறை பலமுறை இந்த சட்டமன்றத்திலே பேசப் பட்டது. அங்கே இருக்கிற நிலைமை என்ன என்று சொன்னால்

@ 3-5-1994—ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நிதி நிலைமைகளைப் பார்க்காமல் ஒரேயடியாக மாநகராட்சியாக ஆக்குவது என்பது ஏற்கக்கூடிய காரியமா என்பதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அதனுடைய நிதிநிலைமை அப்படி இருக்க முடியாது. வருவாய் அதிகமாக வரியைக் கூட்ட வேண்டியிருக்கிறது. இப்போது தேர்தல் வர இருக்கிறது. தேர்தலுக்குப் பின்னால் அந்த வைத்துக்கொள்ளலாமே தவிர, அதற்கு முன்னால் தேவையா என்பதை நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சென்னை மாநகராட்சிக்கு ஒரு நார்ம்ஸ் என்று இருக்கிறது. அந்த அளவுக்கு நெல்லை மாவட்டத்தில் இருக்கிற ஒரு மாநகராட்சிக்கு வருமானம் இருக்குமா என்றால், அங்கே எந்த ஒரு பெரிய தொழிலும் இல்லை. வருமானம் வர வாய்ப்பில்லை. சேலம் மாவட்டத்தில் ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதைப்போல திருச்சியிலும் இருக்கிறது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எனக்கு நன்றாகத் தெரியும். நிச்சயமாக அங்கே வருவாய் ஈட்டக்கூடிய தொழிற்சாலைகளோ தொழில் ஸ்தாபனங்களோ இல்லை. அந்த அளவுக்கு இருக்கும்போது, திடீர் என்று 3 நகராட்சிகளை மாநகராட்சிகளாக ஆக்குவது ஏற்கக்கூடிய காரியமா என்பதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று அங்கே இருக்கின்ற மாநகராட்சிக்கு பல்வேறு Infr Stuctore வேண்டுமென்ற அளவுக்கு அந்த மாநகராட்சி இருக்குமா என்றால் அந்த அளவுக்கு இல்லை என்றுதான் சொல்ல முடியும். தேர்தல் காலமாக இருக்கிற காரணத்தால் தேர்தலுக்குப் பின்னால் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டு, இந்த சட்டங்களை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமருகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சிகளை இப்போது மாநகராட்சிகளாக ஆக்குவதற்கு வேண்டிய வசதி இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று சொல்வார்கள். அங்கே பல்வேறு வசதிகள் செய்து தர வேண்டுமென்று மக்கள் ஒரு பக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் வரியைக் கூட்டக்கூடாது, மாநகராட்சியாக ஆக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இரண்டுக்கும் மத்தியிலே சட்ட மன்ற உறுப்பினர்களாகியடு எங்களைப் போன்றவர்கள் தான் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். கேளுங்கள் கொடுக்கப்படும்,

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கிடைக்கும் என்பது ஏசு பெருமானுடைய பெருந்தன்மை. நாங்கள் கேட்கவும் இல்லை, தட்டவும் இல்லை, தேடவும் இல்லை. எங்களுக்கு திருநெல்வேலி மாநகராட்சியைக் கொடுத்துள்ள தமிழகத்தின் நிரந்தர முதல்வர், எங்களுடைய நெஞ்சங்களிலே நிறைந்திருக்கிற அன்புத் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் திருநெல்வேலி மாவட்ட மக்கள் சார்பாக முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில முக்கியமான கருத்துக்களை மட்டும் கூறி காலத்தின் அருமை கருதி முடித்துக் கொள்கிறேன். இப்போது மாநகராட்சி அமைகிற போது, பல்வேறு பகுதிகளை அதிலே சேர்க்கிறபோது, சில குறைபாடுகள் இருக்கின்றன. எடுத்துக் காட்டாக கரையிருப்பு என்ற ஊராட்சி, மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே ஊராட்சியின் தென் பகுதியில் உள்ள அந்த ஊருக்குள்ளே அடங்கிய ஒரு தெரு இன்னொரு ஊராட்சியுடன் சேர்ந்திருக்கிறது. அந்த ஊராட்சியைப் பொறுத்த வரையில் மாநகராட்சியோடு இணைக்கப்படவில்லை. ஆகவே, ஒரே ஊரில் இருக்கிற ஒன்றாக இருக்கிற ஒரு சிறு பகுதி ஊராட்சிப் பகுதியாகவும் ஏனைய பகுதிகள் மாநகராட்சிப் பகுதிகளாகவும் இருக்கின்றன. இப்படி எந்தெந்த இடத்தில் எல்லாம் இருக்கிறது என்பதை அதிகாரிகள் மூலமாக நன்றாக ஆராய்ந்து பார்த்து ஒரே பகுதியிலே இருக்கிற அனைத்துப் பகுதிகளையும் அந்த மாநகராட்சியோடு இணைக்கின்ற அளவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

அதைப் போல மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பிறகு தேர்தல் வந்து, பிறகு மன்றம் அமைய இருக்கிறது. அந்த மன்றம் அமைகிற வரை தனி அலுவலர்களுக்கு அங்கே அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுக்கிறபோது, வருகின்ற மன்றம் எதை விரும்புகிறதோ, மக்கள் பிரதிநிதிகள் எதை விரும்புகிறார்களோ அதைக் கருத்திலே கொண்டு செயல்பட வேண்டும். அப்படிச் செயல் படுவதற்கு இப்போது இருக்கிற எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே சாலை வசதி, குடிநீர் வசதி, சுகாதாரப் பணிகள், ஆக்கிரமிப்புகள், தெரு விளக்குகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளில்—எங்களுக்குத்தான் அனுபவம் இருக்கிறது; அதிகமாக இருக்கிறது. உடனடியாக ஒரு ஐ. ஏ. எஸ். ஆபீசர் போன்றவர்களை தனி

அதிகாரியாகப் போட்டு அதை அவர்கள் மட்டுமாக செய்கிற போது, வருகின்ற மன்றத்துக்கும் அவர்களுடைய நடவடிக்கைக்கும் ஏதாவது முரண்பாடு இருக்கலாம். ஆகவே, அந்தந்தப் பகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களையும்—தேர்தல் நடைபெறுகிற வரை அதிகாரப்பூர்வமாக அங்கே எங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இந்த சட்டப் பிரிவில் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அத்தனைபேரும் அந்த மன்றத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்திலே வந்துவிடுகிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் ஐந்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மட்டும் பேரவைத் தலைவர் அவர்களால் நியமிக்கப்படுகிறவர்கள் மட்டும்தான் அங்கே அங்கம் வகிப்பார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. திருநெல்வேலி மாநகராட்சியைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்சினை எழவில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அந்த மாநகராட்சிப் பகுதியில் இருப்பது மொத்தமே 2 சட்ட மன்ற உறுப்பினர்கள் தான். ஆகவே இதிலே ஐந்தில் ஒரு பங்கு என்று குறைத்து அங்கே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஒருவேளை சென்னை மாநகராட்சியை மனதிலே வைத்து இந்தச் சட்டம் இயற்றப்பட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால் சென்னையிலே 14 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 14 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த மன்றத்திலே பிரதிநிதித்துவம் கொடுக்க முடியாது என்கிற காரணத்திற்காக ஐந்தில் ஒரு பங்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் சுற்று முறையிலே நமது பேரவைத் தலைவர் அவர்களால் நியமிக்கப்படுவார்கள் என்பது சரியாக இருந்து இருக்கலாம். திருநெல்வேலி மாநகராட்சியைப் பொறுத்த வரையில் இரண்டே சட்டமன்ற உறுப்பினர்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் சுற்று முறையிலே ஒருவர் இருக்கிற போது இன்னொருவர் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற அவசியம அங்கு எழவில்லை. ஆகவே உடனடியாக இதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து திருநெல்வேலி மாநகராட்சியைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதியிலே இருக்கிற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மன்றத்திலே இடம் பெறுவார்கள் என்று ஒரு திருத்தம் நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இந்த மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இதுவரை அது நகராட்சியாக இருந்து, அங்கே தனி அதிகாரிகள் மூலம் நாங்கள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டு

1994 மே 5] (திரு. டி. வேலையா)

இருக்கிறோம். இந்த ஊராட்சிப் பகுதி நகராட்சிப் பகுதிகளைப் பொறுத்த வரையில் அங்கே நிலவுகிற ஒரு விஷயத்தை நான் இங்கே கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்ய அது என்னவென்று சொன்னால், பொது நலச் சங்கம் என்கிற பெயரிலே சிலர் சங்கம் வைத்துக் கோண்டு நாங்கள் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவர்கள் இல்லை; எந்த மதத்தையும் சார்ந்தவர்கள் இல்லை என்று சொல்லி ஒரு சங்கத்தை வைத்து செயல்படுகிறார்கள். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது பொது மக்கள் மத்தியிலே ஒரு வெறுப்பை ஏற்படுத்தி ஏதாவது ஒரு பஸ் ஷெல்டர் கட்ட ஒரு 10 ஆயிரம் ரூபாய் அல்லது 15 ஆயிரம் ரூபாயை முதலிலே செலவழிக்கிறார்கள். அதற்காக அதிகாரிகளை அவர்களை வைத்து திறந்து வைக்கச் சொல்கிறார்கள். அந்த அதிகாரிகளிடம் நல்ல பெயரை வாங்கிக் கொண்டு மக்கள் மத்தியிலே ஒரு நம்பிக்கையை வாங்கிக் கொண்டு பிறகு வருகிற காலத்தில்—அங்கு நடைபெறுகிற சாலை மறியல், பஸ் போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களுக்கு இப்படிப்பட்டவர்கள்தான் பின்னாலே காரணமாக இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அனுபவபூர்வமாக அறிந்து இருக்கிறோம். அவர்கள் எங்கிருந்து வந்தார்கள், ஏன் அப்படி செயல்படுகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அரசியலுக்கும் எங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லிக் கொண்டு பிறகு அவர்கள் தான் அரசியல் போராட்டங்களை ஆங்காங்கே தூண்டி விடுகிறார்கள். இப்போது தமிழ்நாட்டிலே நடந்து கொண்டிருக்கிற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் இப்படி உருவம் தெரியாமல் எங்கு இருந்தோ வந்து செயல்படுகிற அமைப்புகளுக்கும் மக்கள் மத்தியிலே சட்டமன்ற உறுப்பினர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்துகிற அரசாங்க அதிகாரிகள் மத்தியிலே ஒரு நம்பிக்கையைப் பெறுகிற அந்த அமைப்புகளுக்கு பணமும் நிறைய இருக்கிறது, செல்வாக்கும் இருக்கிறது. ஆனால், இவர்கள் எங்கே இருந்து வருகிறார்கள், எப்படிச் செயல்படுகிறார்கள் என்பது மட்டும் தான் கொஞ்சம் மர்மமாக இருக்கிறது ஆகவே இவர்களுடைய செல்வாக்கை நாம் கட்டுப்படுத்த வேண்டும். நான் அதற்காகத்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன். இவர்களுடைய செல்வாக்கை நாம் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களை, எங்களைப் போன்றவர்களை நன்கு கலந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் உறுதி செய்வதாக இருந்தால் நிச்சயமாக இப்படிப்பட்ட போலி இயக்கங்கள் நாட்டிலே நடைபெறாது; அவர்கள் செயல்பட முடியாது, மக்களுக்கு நிம்மதி இருக்கும்; நமது ஆட்சிக்கும் அதனால் கெட்ட பெயர் வராது என்பதை நான் கூறி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், மாவட்ட மக்கள் சார்பாகவும் எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எம். நடேசன், சுருக்கமாகப் பேச வேண்டும்.

திரு. எம் நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சிகள் சட்ட முன்வடிவில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் 1981-ஆம் ஆண்டில் கோவை நகரம் மாநகராட்சியானது. அதற்குப் பிறகு 13 ஆண்டுகள் கழித்து இன்று ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று மாநகராட்சிகளை நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கு ஏற்படுத்திக் கொடுத்து, இங்கே நமக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்து உள்ளார்கள். அதற்காக என்னுடைய மாவட்டத்தின் சார்பாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாங்கனி நகரான சேலம் நருக்கு பல அடிப்படை வசதிகளை நம்முடைய தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் இங்கே செய்து தந்துள்ளார்கள். தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற தங்கத் தலைவி, உலகம் போற்றும் தலைவியாக இருக்கிற நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், குறிப்பாக சேலத்திற்கு மருத்துவக் கல்லூரி, புதிய பஸ் நிலையம், நீதிமன்றக் கட்டிடம், கழிவு நீர் அகற்றும் திட்டம், அதைப்போல 353 கோடி ரூபாய்க்கு நலத் திட்டங்களைச் செய்து தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், எத்தனையோ முதலமைச்சர்கள் வந்தார்கள், எத்தனையோ அமைச்சர்கள் வந்தார்கள், சென்றார்கள், ஆனால் நம்முடைய தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தான் (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற மக்கள் நலப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி முழுவதும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநகராட்சிகள் சட்ட முன்வடிவில் பேச வேண்டும்.

திரு. எம் நடேசன் : தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் இந்த மாநகராட்சிகள் சட்டத்தில் இட ஒதுக்கீடு செய்துள்ளதை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இன்றைய

தினம் எங்கள் சேலம் நகர் மாநகராட்சியாகி இருக்கிறது என்று சொன்னால் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் டி.டி.சி. மீட்டிங் நடப்பதில்லை. என்று அறிகிறேன். டி.டி.சி. மீட்டிங்கில் தான் பல்வேறு நலப் பணிகளைச் செய்ய வாய்ப்பு இருக்கிற காரணத்தால் மாநகராட்சிகளாயிருக்கிற அனைத்துப் பகுதிகளிலும் டி.டி.சி. மீட்டிங் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எம் நடேசன்: நம்முடைய சென்னை மாநகராட்சிக்கு மட்டும் தான் தனி குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப் பட்டிருக்கிறது. மற்றுமுள்ள பகுதிகளிலும் குடிநீர் வடிகால் வாரியத்தைஅமைந்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அதைப்போல ஊராட்சி மற்றும் நகராட்சிகளில் எல்லாம் எம்.எல்.ஏ. எம்.பி.,க்களுக்கு என்று தனி அறை ஒதுக்கப் பட்டிருக்கிறது. மாநகராட்சிகளிலும் அதைப்போல ஒதுக்கித் தர வேண்டு. மென்று கேட்டுக கொள்கிறேன். சேலத்தைப் பொறுத்த வரையில் நீண்ட நெடுங்காலமாய் கோரிவந்த சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் முன்பிருந்த ஆட்சியில் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் அந்த கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்கு ரூ. 1.9. கோடி ஒதுக்கித் தந்ததை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவின் மீது தான் பேச வேண்டும். அடுத்து, டாக்டர் ஆரோக்கியசாமி (குறுக்கிடு) சரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் புதியதாக 3 மாநகராட்சிகளை தமிழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கிற வகையில் உருவாக்கிய பெருமை, தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக அயராது, கண்துஞ்சாது, அல்லும் பகலும் உழைத்துக்கொண்டிருக்கிற, தமிழக மக்களுடைய நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிற, நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் திருச்சி, திருநெல்வேலி

மற்றும் சேலம் ஆகிய 3 நகரங்களை மாநகராட்சிகளாக உயர்த்திட ஆணையிட்டு அதற்குரிய சட்ட முன்வடிவுகளை இந்த மாமன்றத்தில் கொண்டு வருகிற வாய்ப்பினை எனக்கு நல்கிய தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத் தலைமையிடமாகிய சேலம் நகரை மாநகராட்சியாக உயர்த்தும் இந்தச் சட்ட முன்வடிவை இந்த மாமன்றத்தில் கொண்டு வரும் கிடைப்பதற்கரிய வாய்ப்பை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி, திருநெல்வேலி, சேலம் நகராட்சிகள், மக்கள் தொகையிலும், தொழில்முறையிலும், மாநகராட்சி என்ற தகுதியினைப் பெற்று வந்ததைக் கருத்தில் கொண்டுதான் இந்த 3 நகரங்களும் மாநகராட்சிகளாக ஆக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின் பேரில், இந்த உறுதிமொழி இந்த மன்றத்திலே அளிக்கப்பட்டு இருந்தது, என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

பிற்பகல் 2,40

தமிழகத்தைப் பொறுத்தவரை, 13 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், 3 மாநகராட்சிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சி திருநெல்வேலி, மற்றும் சேலம் ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக மாற்றுவதன் மூலம், இந்த மாநகர மக்களுடைய நீண்ட நாளைய கனவை நனவாக்குகின்ற வகையிலே, சட்டமுன்வடிவுகள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. இந்த 3 மாநகராட்சிகளின் வரம்பு எல்லைகள் அருகில் உள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள் நகராட்சிகள் ஆகியவற்றை இணைத்து ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது. தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்ட முன்வடிவுகள் சட்டமாக்கப்பட்ட நாளிருந்து திருச்சி, திருநெல்வேலி மற்றும், சேலம் ஆகிய 3 மாநகராட்சிகள் உதயமாக உள்ளன என்பதை மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற போது, இந்தக் கோரிக்கைகள், செயற்குறிப்புகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த போதிலும்

மாநகராட்சிகளாக நகரங்களை உயர்த்துகின்றபோது, இந்த மாநகராட்சிகளிலே வரி உயரும், அதிகாரிகளுடைய கெடுபிடி இருக்கும் என்பதைப் போன்ற தங்களுடைய அச்ச உணர்வை இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், சொத்து வரி என்பது, அதனுடைய உயர்வு என்பது, அந்தந்தப் பகுதிகளினுடைய கட்டிடங்களின் வாடகை மதிப்பின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மேல் போகாமல் இருக்கின்ற வகையிலே இன்றைக்கு சொத்து வரி எல்லாம் விதிக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே இந்த அரசைப் பொறுத்தவரையிலும் சொத்து வரி என்பது ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மேல் போகாத அளவிற்கு நிச்சயமாக பார்த்துக்கொள்ளும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், இந்த மாநகராட்சிகள் எல்லாம் பல மண்டல அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டு இன்றைக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்ற வகையில், வார்டு கமிட்டிகள் அமைக்கவும் மக்கள் குறைகளைத் தீர்க்கவும், பணிகளை உடன் செயல் படுத்தவும், இந்த மாநகராட்சிகள் உருவாக்கப்பட்ட பின்பு, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் நெல்லை மாநகராட்சிக்கு வருவாய் இல்லை என்றும், சொத்து வரி, அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதை மாநகராட்சியாக ஆக்குவதை மறுபரி சீலனை செய்யவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள், இன்றைக்கு திருநெல்வேலி நகரத்தைப் பொறுத்தவரை, அதற்குத் தகுந்த வருமானம் இருக்கின்ற காரணத்தினாலும், ஒரு நகராட்சியை மாநகராட்சியாக உருவாக்குகின்றபோது, இவ்வளவு வருமானம் இருக்கவேண்டும் என்ற அந்த விதி முறைகளின் அடிப்படையிலேதான், அவை எல்லாம் கணக்கு எடுக்கப்பட்டபிறகு, இன்றைக்கு முறையாக திருநெல்வேலி நகரம் மாநகராட்சியாக ஆவதற்குண்டான அனைத்துத் தகுதிகளும் பெற்றிருக்கின்ற காரணத்தால்தான், திருநெல்வேலி நகரம் மாநகராட்சியாக மாற்றப்பட்டு இருக்கிறது.

அதே போல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு வேலையா அவர்கள் பேசுகின்றபோது, புதிய மாநகராட்சிகளினுடைய சட்டத்திலே ஐந்தில் ஒருபங்கு எம்.எல்.ஏ.க்கள் மட்டும்தான் இடம் பெறுகின்ற வகையில் வழிவகை செய்யப் பட்டு இருக்கிறது. அனைத்து எம்.எல்.ஏ.க்களும் பங்கு பெறுகின்ற வகையிலே, இந்தச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள், இன்றைக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, அனைத்து எம்.எல்.ஏக்

களும் அந்த மாநகராட்சியினுடைய மன்றத்திலே உறுப்பின ராகவும் அவர்கள் வாக்குரிமை அளிக்கின்ற தகுதியும் பெற் றிருக்கின்ற வகையிலேதான், இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இந்த 3 நகராட்சிகளையும் மாநகராட்சிகளாக உருவாக்குகின்ற இந்தச் சட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்று, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

1994 மே 5 (பேரவைத் தலைவர்)

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1994) நிறைவேற்றப் பெற வேண்டும்''. எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) திருநெல்வேலி மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1994), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,